**இலங்கை தென் மேற்குப் பகுதியில் நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முன்முயற்சி செயற்திட்டம் - (கட்டம் - 01) - 2023**

---

நகரங்களிற்கான சுகாதாரம் மற்றும் தூய்மை முன்முயற்சி செயற்திட்டத்தின் (கட்டம் - 01) 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாய சோசலிச குடியரசிற்கும் பிரான்சிஸ் டி அபிவிருத்தி முகவருக்கும் இடையில் கைச்சாத்திட்ட 2016 யூன் 01 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 3.4.3(எச்) ஆம் பிரிவு மற்றும் 2016 மார்ச் 16 ஆந் திகதிய சீஎல்கே 1013 - 02 எல் ஆம் இலக்க நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி

செயற்திட்டத்தின் கடன் வசதி உடன்படிக்கை மற்றும் நிதியளிப்பு உடன்படிக்கை என்பவற்றின் பிரகாரம், முன்னாள் நீர் வழங்கல் அமைச்சாகவிருந்த தற்போதைய நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது.

நீர்கொழும்பு மாநகர சபை பகுதியில் உள்ள 73,000 மக்களிற்கான கழிவுநீர் சேகரிப்பு மற்றும் சுத்திகரிப்பு முறைமைகளை விரிவாக்குதல் மற்றும் சுகாதார சேவைகளிற்கான நுழைவுகளை முன்னேற்றுதல், தண்ணீர் மற்றும் சுகாதார துறை கட்ட வேலைகளை தெளிவுபடுத்துதல் மற்றும் முன்னேற்றுதல், வறுமைக்கு எதிராக வடிவமைக்கப்பட்ட வறுமைக் குறைப்பின் கொள்கைகள் அபிவிருத்தி ஊடாக பாதிக்கப்பட்ட வீட்டுடமையாளர்களிற்கான சேவைக்கான நுழைவு வசதிகள், உத்திகள் மற்றும் கடலோர மற்றும் கடல் சுற்றுச்சூழல் முறைமைகளைப் பாதுகாத்தல் மற்றும் உயிர்-பன்முகத்தன்மையைப் பேணுதல் மற்றும் உயிரணுவியல் பராமரிப்பு என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 18,739.81 மில்லியனிற்கு சமமான யூரோ 107.70 மில்லியனாக உள்ளதுடன் அதில் ரூபா 13,224 மில்லியனிற்கு சமமான யூரோ 76 மில்லியன் கடனாகவும் ரூபா 991.81 மில்லியனிற்கு சமமான யூரோ 5.70 மில்லியன் மானியமாகவும் பிரான்ஸ் டி அபிவிருத்தி முகவரால் நிதியளிப்பதற்கு உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 4,524 மில்லியனிற்கு சமமான யூரோ 26 மில்லியன் இலங்கை அரசாங்கத்தால் பங்களிப்பு செய்யப்பட வேண்டியிருந்தது. செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2016 யூன் 01 இல் தொடங்கியிருந்ததுடன் 2022 யூன் 30 அளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டிருந்தது. கடன் வழங்கும் நிறுவனம் பணம் வழங்குவதை நிறுத்தியதால் 2023 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு செயற்திட்டம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டடிருந்தது.

## 1.3 அபிப்பிராயம்

2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும்

பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக செயன்முன்னேற்றம்

| இல. | செயற்திட்டக் கூறு | செயற்பாடு | 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எதிர்பார்க் கப்பட்ட பௌதீக செயலாற்றல் சதவீதம் | அடைந்து கொள்ளப் பட்ட செயலாற்றல் சதவீதம் | | | |
| (அ) | கழிவுநீர்த் துறையின் தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் மேம்பாடு | முகாமைத்துவ ஆதரவு ஆலோசனை | 100 | 61 | மட்டுப்படுத்தப்பட்ட அளவு நிதி கிடைப்பதால் MSC "தேவைக்கேற்ப" இருந்தது. | செயற்திட்டம் இடைநிறுத்தப்பட்டதால், இந்த ஒப்பந்த உள்ளீடுகள் இனி தேவைப்படாது. | செயற்திட்டத்தை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | காலி/ உனவடுன மற்றும் களனி/ பேலியகொடைக்கான கழிவுநீர் உட்கட்டமைப்புக்கான கற்கைகள் மற்றும் கேள்வி ஆவணங்கள் | வடிவமைப்பு மற்றும் மேற்பார்வை ஆலோசனை | 100 | 52 | நீர்கொழும்பு, காலி/ உனவடுன மற்றும் களனி/ பேலியகொட ஆகிய இடங்களில் உள்ள கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கான (பொதி 2) கேள்வி கோரல் செயன்முறை மற்றும் கேள்வி ஆவணங்களை தயாரித்தல் நிதி கிடைக்காத காரணத்தால் தாமதமாகியது. | 2022 திசெம்பர் 20 அளவில் நீர்கொழும்பு வடிவமைப்புக்களை பூர்த்தி செய்வதற்கு DSC ஆலோசகர் மற்றும் NWSDB இடையே ஒரு புரிந்துணர்வு விஞ்ஞாபனம் கைச்சாத்திடப்பட்டதுடன் DSC இணங்கியவாறு பூர்த்தி செய்யப்பட்டது. | செயற்திட்டப் பணிகளை மீண்டும் தொடங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | கழிவுநீர்த் துறையின் தொழில்நுட்ப உதவி மற்றும் திறன் மேம்பாடு | கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனை (பொதி 1,2,3) | 100 | 60 | (i) பெறுகை செயன்முறையை 2018 நவம்பர் மாதத்தில் தொடங்குவதற்கு பட்டியலிடப்பட்டிருந்த போதிலும் 2022 நவம்பர் மாதத்தில் | பெறுகை ஒப்பந்த நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டன. | மீண்டும் செயற்திட்டத்தை தொடங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | உபகரண ஒப்பந்தம் (பொதி 2) மாத்திரமே வழங்கப்பட்டது, ஏனைய ஒப்பந்தங்கள் 2023 திசெம்பர் 31 வரை வழங்கப்படாமல் இருந்தன. | | |
| (ஈ) | நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் உட்கட்டமைப்பு பற்றிய கற்கைகள் மற்றும் நிர்மாணம். | நீர்கொழும்பு கழிவுநீரை அகற்றும் முறைமைக்காக பம்பி இல்லத்துடன் கூடிய சேகரிப்பு முறைமையை நிர்மாணித்தல். | 100 | 0 | கேள்வி ஆவணம் SCAPC இற்கு சமர்ப்பிக்கப்பட்டு 2022 சனவரி 25 இல் அங்கீகாரம் பெற்ற போதிலும் AFD நிதிக் கட்டுப்பாடுகள் காரணமாக கேள்வி அழைப்பு இடைநிறுத்தப்பட்டது. | நிதி கிடைக்காததால் கேள்வி கோரல் நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. | பயனாளிகளுக்காக செயற்திட்ட செயற்பாடுகளை பூர்த்தி செய்து நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் உட்கட்டமைப்புக்கான கற்கைகள் மற்றும் நிர்மாணம். | கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் வடிவமைப்பு எழுப்பப்பட்ட நிர்மாணம் மற்றும் நீர்கொழும்பு கழிவுநீர் முறைமைக்கான அகற்றல் முறைமை. | 100 | 0 | நிதி கிடைக்காததால் பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. | நிதி கிடைக்காததால் இடைநிறுத்தப்பட்டது. | -மேற்படி- |
| (ஊ) | நீர்கொழும்பு நகரத்திற்கான கழிவுநீர் உட்கட்டமைப்புக்கான கற்கைகள் மற்றும் நிர்மாணம். | குறுகிய வீதிகளில் சேகரிப்பு வலையமைப்பு நிர்மாணம் மற்றும் நீர்கொழும்பு கழிவுநீர் முறைமைக்கான சொத்து இணைப்பு. | 100 | 0 | நிதி கிடைக்காததால் பெறுகை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன. | நிதி கிடைக்காததால் இடைநிறுத்தப்பட்டது. | -மேற்படி- |
| (எ) | காணி சுவீகரிப்பு மற்றும் காணி அனுமதி | | 100 | 6 | 33 காணித்துண்டுகளில் 2 காணித்துண்டுகள் மாத்திரமே 2023 திசெம்பர் 31 அளவில் சுவீகரிக்கப்பட்டிருந்தன. | அரசாங்க செலவினங்களைக் குறைப்பதற்கு சுவீகரிப்பு செயன்முறை வழக்கமான செயன்முறையின் கீழ் தொடரப்படுகிறது. | காணி சுவீகரிப்பு செயன்முறையை விரைவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவு

| செயற்திட்டக் கூறு | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| கழிவுநீர் முகாமைத்துவ திறன் மேம்பாட்டு ஆலோசனை (பொதி 1,2,3) | ரூபா 4.3 மில்லியன் தொகை செயற்திட்டத்தின் நோக்கங்களுக்குப் புறம்பான நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்தது. இந்த செலவினத்தில் ஹோட்டல் தங்குமிடம், பஸ் வாடகை, மலர் அலங்காரங்கள், கண்காட்சி கடைகள், LED திரைகள் மற்றும் தேவதை விளக்குகளுக்கான செலவுகள் உள்ளடங்கியுள்ளது. | இந்த செலவினங்கள் சர்வதேச நீர் மாநாடு 2022 இற்கு பொருத்தமானவையாகும், இதனை பொதி 03 இன் கீழ் மானிய நிதி மூலம் கோருவதற்கு AFD இடமிருந்து எந்த ஆட்சேபனையும் பெறப்படவில்லை. | செயற்திட்ட நோக்கங்களிற்கு அப்பால் செயற்திட்ட நிதியைப் பயன்படுத்துவதற்காக திறைசேரியால் பெறப்பட்ட ஒதுக்கீட்டின் கீழ் நீர் மாநாட்டிற்கான செலவினங்களை வரிசை அமைச்சு ஏற்க வேண்டும். |

## 3. சர்ச்சைத் தன்மையான விடயங்கள்

| இல. | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இந்த செயற்திட்டம் முதலில் 2016 யூன் மாதத்தில் தொடங்கி 2022 யூன் மாதமளவில் பூர்த்தி செய்யப்படுவதற்கு பட்டியலிடப்பட்டதுடன் 2024 இறுதி வரை மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது.<br><br>செயற்திட்டத்தின் நோக்கெல்லை 16,000 m3/நாள் திறன் கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (WWTP), கழிவுநீர் அகற்றும் முறைமை, 79 கிமீ நீளமுள்ள கழிவுநீர் சேகரிப்பு வலையமைப்பு மற்றும் 6000 இணைப்புக்களை உள்ளடக்குகிறது. எனினும், கடன் வசதி உடன்படிக்கையின் கீழ் பணவளிப்புக்கள் இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக, நிர்மாணங்களுக்கான பெறுகை நடவடிக்கைகள் 2023 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. கடன் மற்றும் மானியத்திற்கான பணவளிப்பு தொகைகள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 16,898 மில்லியன் பணவளிப்பு செய்யப்படாத தொகையுடன் முறையே 3 சதவீதம் மற்றும் 1 சதவீதமாக இருந்தன. மேலும், 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தின் வடிவமைப்பு மற்றும் திட்டமிடல் கட்டத்திற்கு ரூபா 1,841 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. | பல்வேறு காரணங்களால் செயற்திட்டம் தாமதமாகியது. | செயற்திட்டத்தின் விரும்பிய நோக்கங்களை அடைந்துகொள்வதற்கு திட்டமிட்ட செயற்பாடுகளை அமுல்ப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | செயற்திட்ட நடவடிக்கைகளில் கணிசமான தாமதம் காரணமாக செயற்திட்டத்தின் எதிர்பார்த்த விளைவுகள் அடைந்துகொள்ளப்படவில்லை. ஆனால், கடந்த 12 ஆண்டுகளாக நாட்டிற்கு எந்தவிதமான பொருளாதார பெறுமதியையும் பங்களிப்பு செய்யாமல், பணவளிப்பு செய்யப்படாத கடன் தொகையின் மீதான கடப்பாட்டுக் கட்டணமாக ரூபா 464.8 மில்லியன் கூட்டுமொத்தம் அரசாங்கத்தால் செலுத்தப்பட வேண்டியிருந்தது. | செயற்திட்டத்தில் தாமதம் காரணமாக பணவளிப்புக்களில் தாமதம் ஏற்பட்டது. | எதிர்பார்த்த இலக்கை அடைந்துகொள்வதற்கு செயற்திட்டத்தை மீண்டும் தொடங்க வேண்டும். |